செய்தி வெளியீடு எண்: 957 நாள்: 12.07.2024

## செய்தி வெளியீடு

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களில் இருந்து தாமிரபரணி பாசனத்தில் உள்ள மருதூர் மேலக்கால் வாய்க்கால் (4554 ஏக்கர்), மருதூர் கீழக்கால் வாய்க்கால் (2970 ஏக்கர்), தென்கால் வாய்க்கால் (2693 ஏக்கர்) மற்றும் வடகால் வாய்க்கால் (3289 ஏக்கர்) ஆகிய வாய்க்கால்களின் கீழுள்ள 13,506 ஏக்கர் நேரடி பாசனப்பரப்பு நிலங்களுக்கு கார் பருவ சாகுபடிக்கு 15.07.2024 முதல் 02.10.2024 முடிய (80 நாட்கள்) 2251.00 மில்லியன் கனஅடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிடுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் திருநெல்வலி மாவட்டத்தில், தாமிரபரணி ஆற்றில் உள்ள மருதூர் மேலக்கால் வாய்க்கால், மருதூர் கீழக்கால் வாய்க்கால், தென்கால் வாய்க்கால் ஆகிய வாய்க்கால்களின் கீழுள்ள 13,506 ஏக்கர் நேரடி பாசன பரப்புகள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu